Mangroves for the Future
INVESTING IN COASTAL ECOSYSTEMS

SDMRI

# கடற்பசுக்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை



## கடற்பசுக்களைக் குறித்த உண்மைகள் :

| | | |
|---|---|---|
| வகை | : | பாலூட்டி |
| உணவுப் பழக்கம் | : | தவார உண்ணி |
| வாழும் காலம் | : | 73 வருடங்கள் |
| முதலாவதாகக் குட்டிபோடும் வயது : | | 7 - 17 வயது |
| கர்ப்பத்திற்கு இடைப்பட்ட காலம் : | | 2.5 - 6 வருடங்கள் |
| பாலூட்டும் காலம் | : | 1.5 வருடங்கள் |
| நீளம் | : | 2.4 - 3 மீட்டர் (8 - 10 அடி) (முழு வளர்ச்சிக்குப் பின்) |
| எடை | : | 231 - 500 கிலோ (முழு வளர்ச்சிக்குப் பின்) |
| IUCN சிகப்புப் பட்டியல் | : | அழியும் நிலையில் உள்ளது |

- கடற்பசுக்கள் கடலின் ஒரே தாவர உண்ணி பாலூட்டிகளாகும். அவை ஆழமற்ற, அமைதியான கடற்பகுதியில் வாழ்கின்றன. கடற்பசுக்கள் கடலின் அரசி என்று வர்ணிக்கப்படுகின்றன.
- கடல் வாழிடங்களின் பராமரிப்புக்கு இவை பேருதவி செய்கின்றன.
- இவற்றின் உடல் உருண்டையாகவும், சிறிய துடுப்பு போன்ற இறக்கைகளை முன்பகுதியிலும், பெரிய தட்டையான வால் பகுதியையும் கொண்டதாகும். குட்டிகள் 1.2 மீ. நீளமும், 3 கிலோ எடையும் கொண்டவையாகும். குட்டிகளை சுறுக்கள், முதலைகள் மற்றும் கொல்லும் திமிங்கலங்கள் ஆகியவை வேட்டையாடுகின்றன.
- கடற்பசுக்கள் பொதுவாக கடற்புற்களை உண்கின்றன.
- சுமார் 30 கிலோ கடற்புற்களை தினமும் தங்களின் உணவுத் தேவைக்காக கடற்பசுக்கள் உண்ண வேண்டும்.

## கடற்பசுக்களின் பரவல் :

- கடற்பசுக்கள் 38 - 45 நாடுகளின் கடற்பகுதிகளில் வாழ்கின்றன. இவை இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடல்களின் வெப்ப, மித வெப்ப மற்றும் தீவுப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இந்தியாவில் மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி, அந்தமான நிக்கோபார் மற்றும் கட்ச் வளைகுடாவில் அதிகமாகக் காணப்படுகின்றன.
- இந்தியாவில் தற்போது மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தியில் அதிகமாக காணப்படுகிறது.

## கடற்பசுக்கள் அழிவதற்கு காரணிகள் :

### 1. கடற்பகுதியின் வளர்ச்சியும் மக்கள் குடியிருப்பும்

கடற்பகுதியின் அதிகரித்து வரும் வளர்ச்சி பணிகளால் கடற் பசுக்களின் முக்கியமான உணவான கடற்புல் படுகைகள் பெரிதளவில் அழிக்கப்படுகின்றன. மணபடிதல் மற்றும் நீர் கலங்கள் போன்றவை கடற்புற்களுக்கு சூரிய ஒளியை மறைத்து அவை அழியக் காரணமாகின்றன.

### 2. நிலப் பகுதியிலிருந்து வரும் கனிமங்கள்

நிலப்பகுதியிலிருந்து வரும் நீர் கடலில் கலப்பதால்



கணிமங்களின் அளவு மிகவும் அதிகரித்து கடல் பாசிப் பெருக்கத்தை ஏற்படுத்தி கடற்புற்கள் அழியக் காரணமாகின்றன.

### 3. உணவு, மருந்து மற்றும் அழகுப் பொருட்களுக்காக வேட்டையாடப்படுதல்

- அதிக எதிர்ப்புத் தன்மை இல்லாததால் கடற்பசுக்கள் எளிதில் வேட்டையாடப்படுகின்றன. இவை அவற்றின் சதை, எண்ணெய், எலும்பு, பற்கள் போன்றவற்றிற்காக வேட்டையாடப் படுகின்றன. மேலும் கொட்டு, தூண்டில் மற்றும் ஆபரணங்கள் ஆகியவையும் இவற்றின் உடலிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

### 4. உபரியாகப் பிடிபடுதல் மற்றும் கப்பலில் மோதுதல்:

- கடற்பசுக்கள் பல நேரங்களில் மீன்பிடி வலைகளில் சிக்கி உயிரிழக்கின்றன. மேலும் ஓடும் மீன்பிடி படகுகளில் அறியாமல் மோதி உயிரை இழக்கின்றன.

### கடற்பசுக்களை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் மேலாண்மை:

- கடற்பசுக்கள் அழியும் நிலையில் உள்ளவையாக உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை CITES (Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora)ல் முதல் அட்டவணையிலும், CMS (Conservation of Migratory Species of Wild Animals) இல் இரண்டாம் அட்டவணையிலும் இடம் பெற்றுள்ளன.
- இந்திய வனவிலங்குச் சட்டம் 1972ன் படி கடற்பசுக்களைக் கொல்வதும் விற்பதும் குற்றமாகும். இவை தொகுதி 1இல் இடம் பெற்றுள்ளன.
- குறைந்தபட்சம் 3லிருந்து 7 வருடங்கள் வரை கடுங்காவல் தண்டனையும், ரூ. 10,000/- முதல் ரூ. 25,000/- வரை அபராதமும் குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும்.
- சுமார் 623 ஹெக்டேர் அளவு மன்னார் வளைகுடாவின் பகுதி 1986ல் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- கடற்பசுக்களை அழிக்கக்கூடிய செயல்களைக் குறைத்து அவை வாழ்விற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

### 5. கடற்பசுக்களை பாதுகாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:

- கடற்பசுக்களின் தற்போதைய எண்ணிக்கை குறித்த முறையான கணக்கெடுப்பு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கடற்பசுக்களின் வாழ்விடமான கடற்புற்களின் அளவு மற்றும் பரவல் குறித்து கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கடற்பசுக்களின் சமூக வாழ்வு, இடப்பெயர்ச்சி, இனப்பெருக்கம், உணவு தெரிந்தெடுத்தல் போன்றவை குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- கடற்பசுக்களின் வாழ்விடமான கடற்புற் படுகைகளை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*மேலும் விபரங்களுக்கு :*

**இயக்குனர்,**

**சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி நிலையம்**

44, கடற்கரை சாலை, தூத்துக்குடி - 628 001

தமிழ்நாடு

தொலைபேசி : 0461-2336488